# HDFC BANK

நான்கு தசாப்தங்களாக பல்வேறு நிதித் தீர்வுகள் ஊடாக இலங்கை மக்களின் வீட்டு கனவை நிறைவேற்றுவதோடு வர்த்தக சமூகத்தினருக்கு நிதி உதவிகளை அளித்து நாட்டின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள வங்கியுடன் உங்களின் வங்கியியல் தொழிலை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

HDFC வங்கியில் கீழ் காணும் பதவிகளுக்கு திறமையான, செயல்திறன் மிக்க சாதகமான நோக்கை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பிரிவுத் தலைவர்: கடன் மற்றும் மீள அறவிடல் பிரதிப் பொது முகாமையாளர் தரம்

## HEAD OF CREDIT & RECOVERY (DGM GRADE)

**தகைமைகள்:-**

- அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் குறைந்தபட்சம் 12 வருட அனுபவம். அதில் குறைந்தபட்சம் 8 ஆண்டுகள் கூட்டாண்மை முகாமைத்துவம்/ நிறைவேற்று அதிகார மட்டத்தில் இருக்க வேண்டும். வங்கி அல்லாத நிதி நிறுவனத்துறையில் பரந்த அனுபவமும் திறமையும் கொண்ட விதிவிலக்கான விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படலாம்.
- அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றின் வங்கி வணிக மேலாண்மை, நிதி, கணக்கியல், சந்தைப்படுத்தல் பொருளாதாரம் ஆகிய பாடநெறியில் பட்டம் மற்றும்/அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்தில் இருந்து ஒரு பட்டம் மற்றும் / அல்லது முழு தொழில்முறை தகுதிகள் மற்றும் / அல்லது முதுநிலை சந்தைப்படுத்தல், வங்கி கணக்கியல் மற்றும் நிதித்துறையில் பட்டம்.
- கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகள் உயர் மட்ட வெளிப்பாடு, அனுபவம் மற்றும் வங்கி கடன், வங்கி கட்டமைப்பு முகாமைத்துவம் மற்றும் நிதி அறிவு போன்றவற்றால் ஈடுசெய்யப்பட வேண்டும்.
- 45 முதல் 55 வயது வரையிலான வயது விரும்பத்தக்கது. எனினும், விதிவிலக்கான திறமையுடன் மற்றும் அடுத்த அரை தசாப்தத்தில் வங்கியை வழிநடத்தும் திறன் கொண்ட ஒரு வேட்பாளருக்கு உச்சபட்ச மற்றும் குறைந்தபட்ச வரம்புகளை மாற்றுவதற்கான உரிமையை HDFC வங்கியின் முகாமைத்துவம் கொண்டுள்ளது.
- விண்ணப்பதாரர் 60 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால், அவர் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்.

**ஊதியம்:**

இரு சாராருக்கும் இடையிலான கலந்துரையாடல் மூலம் ஊதியம் தீர்மானிக்கப்படலாம்.

**விண்ணப்பிக்கும் செயன்முறை**

மின்னஞ்சலின் விடய வரிசையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 25/12/2024 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் careers@hdfc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு கோரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவத்தை கொண்டிராத நபர்களுக்கு இந்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.

ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய்யாத நபர்களின் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் போது ஏற்புடைய கோப்புகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் எக் காரணத்தினாலும் மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

எந்தவொரு அழுத்தம் பிரயோகித்தலும் இப் பதவிக்கான தகைமை இழப்பாக கருதப்படும்.

ஆட்சேர்ப்புகளை பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமை HDFC வங்கிக்கு உண்டு. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.

**உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**

**HDFC வங்கி,**

**த.பெ.இல 2085,**

**சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02**

**தொலைபேசி இல - 0112 356800 -**

**இணையதள முகவரி : www.hdfc.lk**